**MCOP NO:3124/2024 DATE:02.08.2025**

ம.சா :1

பெயர் : திருமதி. மீனா

த/பெ : திரு. துளசி தாஸ்

வயது : 55

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் தற்போது மகளிர் ஆணையத்தில் பணி செய்து வருகிறேன். விபத்து சமயத்தில் காலை 9 மணிக்கு நான் பணிக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது என் மீது ஒரு ஜீப் மோதியது. அந்த ஜீப் ஆனது எந்த வகையை சார்ந்து என்றால் அது அரசுக்கு சொந்தமான வண்டி ஆகும். நான் விபத்தின்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். விபத்து சமயத்தில் எனக்கு வலது கை மற்றும் தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. உட்காயம் ஏற்பட்டது. மேலும் எனது வலது கைக்கு ஏற்பட்டதற்கு பிளேட் வைக்கப்பட்டுள்ளது. 24.01.2024 அன்று எனக்கு விபத்து ஏற்பட்டது. நான் உள்நோயாளியாக 07.02.2024 வரை ஓமந்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனக்கு அந்த விபத்தினால் தலையில் ஏற்பட்ட காயத்தினால் மயக்கம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் சுய நினைவாக இருக்கிறேன். கேட்கக்கூடிய கேள்விகளுக்கு என்னால் பதிவு சொல்ல முடியும். 07.02.2024 பிறகு தொடர் சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். இது தவிர தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். நான் தாக்கல் செய்துள் முதல் பிரமாண பத்திரிக்கையில் இந்த விவரத்தை பற்றி சொல்லவில்லை. நான் சுமார் 15 வருடங்களாக மகளிர் ஆணையத்தில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வருகிறேன், அதற்கான ஆவணமாக என்னுடைய அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன். அது மசாஆ 6 ஆகும். மசாஆ 6-ல் நான் எந்த வருடம் அந்த பணியில் சேர்ந்தேன் என்பது காட்டப்படவில்லை. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய

நபரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மசாஆ 7-ஆன ஊதியச்சான்றிழ் டிசம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை சம்பளம் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. நான் இந்த மனுவை 2024 வருடம் தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரமாண பத்திரிக்கையில் 01.08.2025 அன்று E-Filing மூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் மருத்துவமனையிலிருந்து டிச்சார்ஜ் ஆகி 2 மாதங்கள் கழித்து தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனால் நான் 15 வருடங்களாக பணியில் இருந்தேன் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் 15 வருடங்களாக அந்த பணியில் இருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறாத சூழ்நிலையில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் இழப்பீடாக ரூ.6 லட்சம் கேட்டுள்ளேன் என்பதை பொறுத்து எனது மனுவிலோ, முதல் பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது நான் தற்காலிக அடிப்படையில் பணிக்கு சென்று கொண்டிருக்கிறேன். அதன் மூலமாக ரூ.10,000/- சம்பளம் பெற்று வருகிறேன். நான் விடுப்பு எடுத்த பின்னிட்டு ரூ.10,000/- சம்பளம் ஈட்டி வருவதாக சொல்வதால் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போதும் தற்காலிக அடிப்படையில் பணிக்கு செல்வதால் எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்வதுபோல் எனக்கு அடிக்கடி தலைவலி, தலைச்சுற்றல் மற்றும் மயக்கம் ஆகியவை ஏற்படுவதாக சொல்வது இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் சொல்வது சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்தமனுவானது ஏற்புடையதல்ல என்றும் அது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.